සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 07 - 2023 (2024)
Third Term Test - Grade 07 - 2023 (2024)

# கத்தோலிக்க திருமறை

நேரம்: 2 மணி.

**சுட்டெண்:**

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. செபமாலை அன்னை திருவிழாவை முழுத்திருச்சபையும் கொண்டாட வேண்டுமென பிரகடனப்படுத்தியவர்,
    i. திருத்தந்தை 11 ஆம் கிளமன்ட் ii. திருத்தந்தை 13 ஆம் கிரகோரி
    iii. திருத்தந்தை 6 ஆம் சின்னப்பர் iv. திருத்தந்தை 5 ஆம் பத்தினாதர்

02. ஒளியின் மறையுண்மைகளை தியானிக்கும் நாட்கள்
    i. திங்கட்கிழமை ii. செவ்வாய்க்கிழமை
    iii. புதன்கிழமை iv. வியாழக்கிழமை

03. “என் ஆன்மா இறைவனையே ஏற்றிப் போற்றியே மகிழ்கின்றது” என்ற பாடலைப் பாடியவர்,
    i. சிமியோன் ii. அன்னை மரியாள்
    iii. செக்கரியா iv. யோசேப்பு

04. ஆலயத்திருவிழா ஒன்பது நாட்களில் நடைபெற்று முடிவுறும் என்பது எதன் பின்னணியாக அமைகின்றது,
    i. இயேசுவின் உயிர்ப்பு நாளின் பின்னணியாகும்
    ii. மரியன்னையின் விண்ணேற்பு நாளின் பின்னணியாகும்
    iii. பெந்தகோஸ்து நாளாகிய தூய ஆவியின் திருவிழாவின் பின்னணியாகும்
    iv. இயேசுவின் பாஸ்கா மறை பொருளின் பின்னணியாகும்

05. இயேசுவிற்கு மரணத்தீர்ப்பு வழங்கியவர் யார்?
    i. ஏரோது ii. பிலாத்து
    iii. அன்னாஸ் கைபாஸ் iv. தலைமைக் குரு

06. இயேசு தனது திருத்தாயாரைச் சந்தித்ததை நினைவு கூறும் நிலை எது?
    i. 1ம் நிலை ii. 2ம் நிலை
    iii. 3ம் நிலை iv. 4ம் நிலை

07. பங்கு மக்கள் குழுவாகவோ, குடும்பமாகவோ, விசேட தேவைகளின் போது செய்யக் கூடிய பெறுமதி வாய்ந்த பக்தி முயற்சி எது?
    i. செபமாலை ii. கல்லறை ஆண்டவர் செபம்
    iii. சிலுவைப் பாதை iv. திருமணித்தியாலம்

08. மருதமடு தேவ அன்னையின் திருத்தல வளர்ச்சிக்கு உதவிய புனிதர் யார்?

i. புனித யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் ii. புனித அந்தோனியார்

iii. புனித சவேரியார் iv. புனித யோசப்வாஸ் அடிகளார்

09. “இஸ்ராயேல்” எனப் பெயர் மாற்றப்பட்டவர்,

i. ஈசாக் ii. ஏசா iii. யாக்கோபு iv. ஆபிரகாம்

10. ஆதித் திருச்சபையில் பொய்ச்சான்று கூறியதால் மரணித்தவர்கள்,

i. அனனியா, சப்பிராள் ii. அனனியா, எலிசபெத்

iii. சப்பிராள், பவுல் iv. ஆதாம், ஏவாள்

- **இடைவெளி நிரப்புக.**

11. சமூக நீதியின் இறைவாக்கினர் .............................................. ஆவார்.
12. என் பின்னே வாருங்கள் நான் உங்களை ........................................ ஆக்குவேன்.
13. எசேக்கியேல் இறைவாக்கினரின் தந்தை ........................................................ ஆவார்.
14. நீங்கள் போய் எல்லா ........................................ சீடராக்குங்கள்.
15. உம் சொற்படியே .......................................................

- **சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (x) எனவும் அடையாளமிடுக.**

16. தூய ஆவிக்கெதிராகப் பொய் சொல்வது பாவமாகும். (  )
17. பிறர் உடமைகளை விரும்புதல் எட்டாம் கட்டளைக்கெதிரான பாவமாகும். (  )
18. “நான் யாரிடமாவது அநீதியாக எதையாவது வாங்கியிருந்தால் நான்கு மடங்காக திருப்பிக் கொடுப்பேன்” என சக்கேயு கூறினார். (  )
19. மனிதனே படைப்புக்கெல்லாம் அதிபதியாக இருப்பவர். (  )
20. இயேசு பூங்காவனத்தில் இரத்த வியர்வை சிந்தினார் என மகிமை நிறை மறையுண்மையினூடாக தியானிக்கின்றோம். (  )

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. i. "என்னைப் பின்பற்றி வா" என யாரால், யாருக்கு கூறப்பட்டது? (1 புள்ளி)

ii. திருமுழுக்கு எவ்வாறு அளிக்கப்படுகின்றதென எடுத்துக் காட்டும் படிமுறைகள் அடங்கிய புத்தகம் எது? (1 புள்ளி)

iii. குருத்துவம் என்னும் அருளடையாளத்தை வழங்குபவர் யார்? (1 புள்ளி)

iv. துறவற வார்த்தைப்பாடுகள் எவை? (1 புள்ளி)

v. குடும்பத் தலைவனுக்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாக இருந்தவர்? (1 புள்ளி)

vi. நற்கருணை ஆசீர்வாதம் பெறும் சந்தர்ப்பங்கள் 2 குறிப்பிடுக? (1 புள்ளி)

vii. சிலுவைப் பாதை என்றால் என்ன? (1 புள்ளி)

viii. திருமணித்தியாலம் நடத்தப்படும் நாட்கள் இரண்டு குறிப்பிடுக. (1 புள்ளி)

ix. நற்கருணைப் பவனி நடைபெறுவதற்கான காரணங்கள் 2 எழுதுக. (2 புள்ளி)

x. மாத்தறை வெற்றி மாதா சொரூபத்தை வடிவமைத்தவர் யார்? (2 புள்ளி)

02. i. இறைவாக்கினர் என்பவர் யார்?

ii. பெரிய இறைவாக்கினர் மூவரையும் குறிப்பிடுக.

iii. நீர் ஓர் இறைவாக்கினராக இருந்தால் உம்மில் வளர்த்துக்கொள்ள வேண்டிய தலைமைத்துவப் பண்புகள் 5 தருக. (12 புள்ளிகள்)

03. i. ஏழாவது கட்டளையினை எழுதுக.

ii. உடைமைகள் மட்டில் எமக்குள்ள கடமைகள் எவை?

iii. நீதியின் முறையில் சொத்துக்களைக் பெற்றுக் கொள்ளக்கூடிய முறைகள் 5 எழுதுக. (12 புள்ளிகள்)

04. i. மீட்பின் மறையுண்மைகளில் உள்ளடங்கும் விடயங்கள் எவை?

ii. செபமாலையில் தியானிக்கப்படும் மறையுண்மைகள் 4ம் எவை?

iii. மகிழ்ச்சி நிறை மறையுண்மைகளில் தியானிக்கும் விடயங்கள் ஐந்தும் எவை? (12 புள்ளிகள்)

05. i. திருச்சபையினது உலகம் முழுவதும் ஒரே நாளில் கொண்டாடுகின்ற விழாக்கள் எவை?

ii. ஆலயத் திருவிழா கொண்டாடுவதற்கான காரணங்கள் 3 எழுதுக.

iii. ஆலயத்தின் மாலை ஆராதனை ஒழுங்கமைப்புக்கு உம்மால் செய்யக் கூடிய பணிகள் 5 எழுதுக. (12 புள்ளிகள்)

06. i. ஒல்லாந்தர் காலத்தில் கண்டி அரசரின் பிரதான அதிகாரியின் துணையுடன் கட்டப்பட்ட திருத்தலம் எது?

ii. இலங்கையிலுள்ள திருயாத்திரை திருத்தலங்கள் எவை?

iii. திருயாத்திரை செய்வோர் திருத்தலத்தின் புனித நிலையைப் பாதுகாத்துக் கொள்ள செய்ய வேண்டிய செயல்கள் 5 எழுதுக. (12 புள்ளிகள்)

(4) WWW.PastPapers.WiKi (3)
Download Term Test Papers, Short Notes From One Place!

07. எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

i. எசாயா இறைவாக்கினர்

ii. திருமணம்

iii. குலமுதுவர் யாக்கோபு

iv. பத்துக்கட்டளை (12 புள்ளிகள்)

(4) WWW.PastPapers.WiKi (4)



Download Term Test Papers, Short Notes From One Place!


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න